SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2026
## (Level I Examination – January 2026)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (104) வணிகச் சூழல் (BEN)


**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**
இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்
இல, 540, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669



கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜனவரி 2026**

**(104) வணிகச் சூழல்**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

*இருபது (20) கட்டாய வினாக்கள்*
*(மொத்தம் 40 புள்ளிகள்)*

**பகுதி A**

## *வினா 01 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**1.1** (4)

**1.2** (1)

**1.3** (3)

**1.4** (3)

**1.5** (2)

**1.6** (4)

**1.7** (3)

**1.8** (3)

**1.9** (2)

**1.10** (4)

**1.11** சரியானது

**1.12** தவறானது

**1.13** சரியானது

**1.14** சரியானது

**1.15** தவறானது

**1.16** ஒரு முறைசார்ந்த நிறுவன அமைப்பு என்பது குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கான வரையறுக்கப்பட்ட வகிபாகங்கள், விதிமுறைகள், அதிகாரம் மற்றும் பொறுப்புகளைக் கொண்ட, நன்கு சிந்தித்து திட்டமிடப்பட்ட கட்டமைப்பாகும்.

1.17 நல்ல பணத்தின் பண்புகள் பின்வருமாறு:

- பொதுவான ஏற்புடமை
- நீடித்த வாழ்வுத் தன்மை
- கொண்டுசெல்லத்தக்க தன்மை
- பிரிபடும் தன்மை
- சீரான தன்மை
- அருமை (வழங்கல் வரையறுத்த தன்மை)
- பெறுமதியின் நிலைத்த தன்மை
- போலியாக அச்சிடுவது கடினமான தன்மை (இலகுவாக அச்சிட இயலாமை)
- அடிக்கடி இரத்து செய்யப்படும் இயல்பற்றது.

1.18 உள்நாட்டு வர்த்தகத்தை வெளிநாட்டு (சர்வதேச) வர்த்தகத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் வேறுபடுத்தி அறியலாம்

| உள்நாட்டு வர்த்தகம் | வெளிநாட்டு (சர்வதேச) வர்த்தகம் |
|---|---|
| • ஒரே நாட்டினுள் நடைபெறும். | • வெவ்வேறு நாடுகளிடையே நடைபெறும். |
| • காசு அல்லது காசுக்கு சமமானவை கொடுப்பனவு முறைகளாகப் பயன்படுத்தப்படும். | • கொடுப்பனவு முறைகள் நாணயக் கடிதம் போன்ற ஒப்பீட்டளவில் சிக்கலானவற்றை உள்ளடக்கும் |
| • உள்நாட்டு நாணயம் பயன்படுத்தப்படும். | • வெளிநாட்டு நாணயங்கள் பயன்படுத்தப்படும். |
| • தேசிய சட்டங்களால் ஆளுகை செய்யப்படும். | • சர்வதேச வர்த்தக சட்டங்களால் ஆளுகை செய்யப்படும். |
| • எளிமையான ஆவணப்படுத்தல்கள் | • சிக்கலான ஆவணப்படுத்தல் |
| • ஒப்பீட்டளவில் எளிதான அல்லது இலகுவான விதிமுறைகள் | • சிக்கலான விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் |
| • உள்நாட்டு வர்த்தக வரிகள் மட்டும் பிரயோகமாகும் | • உள்நாட்டு வர்த்தக வரிகள் மற்றும் சர்வதேச வர்த்தக வரிகள் (சுங்கத் தீர்வை, CESS, PAL போன்றவை) |

1.19 ஒரு நிறுவனத்தின் அக்கறைதாரர்களில் பின்வரும் தரப்பினர் அடங்குவர்:

- உரிமையாளர்கள் (பங்குதாரர்கள்)
- ஊழியர்கள்
- வாடிக்கையாளர்கள்
- வழங்குனர்கள்
- முகாமை

- அரசு
- கடன் வழங்குபவர்கள்
- போட்டியாளர்கள்
- பொதுமக்கள்

**1.20** SME-களின் தோல்வியைப் பாதிக்கும் உள்முகக் காரணிகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- மோசமான முகாமை மற்றும் தலைமைத்துவம்
- நிதி முகாமை, கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கம் இன்மை
- போதுமான திட்டமிடல் மற்றும் தந்திரோபாயம் இன்மை
- மோசமான பதிவு வைத்தல்
- திறமையான ஊழியர்கள் இன்மை
- வினைத்திறனற்ற செயற்பாடுகள்
- மோசமான சந்தைப்படுத்தல் தீர்மானங்கள்
- பலவீனமான அகக் கட்டுப்பாடுகள்
- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் இன்மை
- மோசமான தீர்மானம் மேற்கொள்ளல்
- மிகை வர்த்தகம்
- நெகிழ்வுத்தன்மை இன்மை
- முறையற்ற காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வு
- பொருத்தமற்ற தனிநபர் பண்புகள்

***(மொத்தம் 40 புள்ளிகள்)***

SRI LANKA

***பிரிவு A முடிவு***

## வினா 02 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

*அத்தியாயம் 01* – **வணிக அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய எண்ணக்கருக்கள்**

**(a)**

**(1) ஒரு பொருளாதார நடவடிக்கையாகக் காணப்படுதல்:**

ஒரு வணிகம் தனித்த அல்லது தொகுதியான நோக்கங்களைக் கொண்டிருக்கும். இந் நோக்கங்களை அடைய அவை கொண்டிருக்கும் வளங்கள் வரையறுக்கப்பட்டவை. எனவே, எந்த வணிக நிறுவனத்திலும் பொருளாதார செயற்பாடு நடைபெறுகிறது. ஆகவே, **DK Juice Bar** ஒரு பொருளாதார நடவடிக்கையைக் கொண்டுள்ளது.

**(2) கொள்வனவு, விற்பனை அல்லது பரிமாற்றம்:**

ஒரு வணிகத்தின் பிரதான நோக்கம் கொள்வனவு மற்றும் விற்பனை ஆகும் (வியாபாரம்). **DK Juice Bar** பழச்சாற்றை விற்பனை செய்வதுடன், பழச்சாறு தயாரிப்பதற்காக மூலப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன.

**(3) தொடர்ச்சியான செயன்முறை:**

ஒரு வணிகம் என்பது ஒரேயொரு முறை மாத்திரம் செயற்படும் செயற்பாடு அல்ல. அது பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஒரு தொடர்ச்சியான செயன்முறையாகும். இது பல வணிக முயற்சிகளில் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து இலாபத்தை அதிகரிக்கும் ஒரு செயன்முறையாகும்.

**(4) இலாபத்தினால் உந்தப்படுதல் அல்லது இலாப நோக்கம்:**

வணிக வெற்றியைக் காட்டும் குறிகாட்டி இலாபத்தன்மை ஆகும். பொருட்கள் மற்றும் சேவைகளின் விற்பனை மூலம் இலாபத்தை உச்சப்படுத்துவதே ஒரு வணிகத்தின் பிரதான நோக்கமாகும். **DK Juice Bar** வணிகத்தின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதாகும்.

**(5) இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மை:**

வணிக நோக்கங்களை அடையத் தடையான நிச்சயமற்ற தன்மையே இடராகும். அதாவது, உத்தேச நோக்கங்களை அடையாதிருப்பதற்கான நிகழ்தகவு ஆகும். இதுவே வணிகத்தின் இயல்பாகும். இத்தகைய நிச்சயமற்ற தன்மைகள், இடர்கள் போன்றவை வணிகச் சூழலில் நிலவும் பல்வேறு சக்திகள் மற்றும் நிலைமைகளைப் பாதிக்கின்றன.

**(6) தேவைகள் அல்லது படைப்பாற்றலை உருவாக்குதல்:**

மாறிவரும் வணிகச் சூழல்களுக்கு ஏற்ப புத்தாக்க உருவாக்கத்தின் ஒரு அலகாக இருப்பது என்பது இதன் பொருள் ஆகும். வணிகங்களை மனிதத் தேவைகளுக்கான உற்பத்திகளை உருவாக்கும் அலகுகளாக அடையாளம் காணலாம். அதன் வாடிக்கையாளர்கள் எந்தப்

aat SRI LANKA

பொருட்களை விரும்புகிறார்கள், அவற்றை எவ்வாறு உற்பத்தி செய்வது மற்றும் எப்போது தேவைப்படுகிறார்கள் என்பதைத் தீர்மானிப்பது வணிகத்தின் சிறப்பியல்பு ஆகும்.

**எனவே, DK Juice Bar ஒரு வணிகமாக வகைப்படுத்தப்படலாம்.**

*(03 புள்ளிகள்)*

**(b)** ஒரு தனிவியாபாரம் மற்றும் பங்குடமை ஆகியவற்றைப் பின்வருமாறு வேறுபடுத்தலாம்:

| அடிப்படை | தனிவியாபாரம் | பங்குடமை |
|---|---|---|
| (i) உரிமைத்துவம் (சொந்தம்) | ஒரு தனிநபரால் (உரிமையாளர்) உரிமை கொள்ளப்பட்டது. | 2 முதல் 20 வரையிலான பங்காளர்களால் உரிமை கொள்ளப்பட்டது. |
| (ii) இலாப நட்டங்கள் | இலாப நட்டங்கள் உரிமையாளரால் மட்டுமே ஏற்கப்படும். | இலாப நட்டங்கள் இணங்கப் பட்டவாறு பங்காளர்களிடையே பகிரப்படும். |
| (iii) முகாமை | உரிமையாளராலேயே முகாமை செய்யப்பட்டு, கட்டுப்படுத்தப்படும். | முகாமையானது அனைத்து அல்லது சில பங்காளர்களால் மேற்கொள்ளப்படும். |

*(03 புள்ளிகள்)*

**(c)** கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு பங்குடமையுடன் ஒப்பிடும்போது ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியானது பல நன்மைகளைக் கொண்டிருக்கலாம்:

- குடும்பத்தில் உறவினர்களின் உரிமைகளைப் பேண முடியும்.
- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே நிறுவனத்தின் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.
- வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான மக்களிடையே இலாபத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும்.
- அதிக மூலதனத்தை திரட்ட முடியும்.
- இயக்குனர் சபை மூலமான வினைத்திறனான முகாமை.
- அனைத்து பங்குதாரர்களின் ஒருமித்த தீர்மானத்தையும் எடுக்காமல் நிறுவனத்தின் பெரும்பாலான பணிகளைச் செய்ய முடியும்.
- கடன் சோதனையின்றி, பங்குதாரர்களுக்கு பங்கிலாபத்தை வழங்க முடியும்.
- பல்வேறு வரி சலுகைகள்.
- வரையறுக்கப்பட்ட பொறுப்பு
- தனியான சட்ட ஆளுமை
- நீடித்த வாழ்வுத்தன்மை
- எளிதான மூலதன திரட்டல்
- அதிக நம்பகத்தன்மை

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## வினா 03 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச்சேவைகள்**

**(a)** அனு'கா கருத்திற் கொள்ளக்கூடிய பல்வேறு வகையான காப்புறுதிக் கொள்கைகள் காணப்படுகின்றன. வணிக முன்னுரிமைகளுக்கேற்ப காப்புறுதியின் நோக்கமும் தேவையும் வேறுபடலாம். இத்தகைய காப்புறுதிகளில் பின்வருவன உள்ளடங்கும்:

(i) தீ அபாயக் காப்புறுதி

(ii) கடல் அபாயக் காப்புறுதி

(iii) களவு அபாயக் காப்புறுதி

(iv) இயந்திர சேதக் காப்புறுதி

(v) தொழில்தருனா் பொறுப்பு / தொழிலாளர் இழப்பீட்டு காப்புறுதி

(vi) பொதுப் பொறுப்புக் காப்புறுதி

(vii) கடன் காப்புறுதி

(viii) மோட்டார் வாகனக் காப்புறுதி

(ix) ஆயுள் காப்புறுதி

(x) இயற்கை அனா்த்தக் காப்புறுதி

(xi) வழிச் சரக்குக் காப்புறுதி

(xii) வழிப் பணக் காப்புறுதி

*(02 புள்ளிகள்)*

**(b)** காப்புறுதியை ஆளுகை செய்யும் பல்வேறு தத்துவங்கள் காணப்படுகின்றன. அவையாவன:

(i) உச்ச நம்பிக்கைத் தத்துவம்

(ii) காப்புறுதி செய்யும் உரிமைத் தத்துவம்

(iii) இழப்பீட்டுத் தத்துவம்

a. புதிலாள் வைப்புத் தத்துவம்

b. பங்களிப்புத் தத்துவம்

(iv) அண்மைக் காரணத் தத்துவம்

*(02 புள்ளிகள்)*

**(c)** அனு'காவின் வணிகத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் காப்புறுதி முக்கியமானது. இந்த முக்கியத்துவத்திற்கான காரணங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளன:

- **பாதுகாப்பு**: வணிக இழப்பின் நிச்சயமற்ற தன்மை குறைக்கப்படுகிறது: காப்புறுதி எதிர்பாராத இழப்புகளுக்கு எதிராக நிதி பாதுகாப்பை வழங்கி, வணிக இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கிறது.
- **வணிகத்தின் தொடர்ச்சித்தன்மை**: விபத்துகள் அல்லது அனா்த்தங்களுக்குப் பின்னர் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதன் மூலம் வணிகத்தின் தொடர்ச்சித் தன்மையைக் காப்புறுதி உறுதி செய்கிறது.

- **முதலீடுகளுக்கான ஆதரவு**: சில இழப்புகளுக்கு இழப்பீடு வழங்குவதன் மூலம் இயந்திரங்கள் மற்றும் ஏற்றுமதிகளில் பெரிய அளவிலான முதலீட்டை காப்புறுதிகள் ஊக்குவிக்கின்றன.
- **நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை / கடன் விஸ்தரிப்பு**: வங்கிக் கடன்களைப் பெறும்போது காப்புறுதிகள் சில சந்தர்ப்பங்களில் உத்தரவாத மூலமாகப் பயன்படுத்தப்பட முடியும் ஆகையால் அவை கடன் தகுதியை மேம்படுத்துகின்றன.
- **ஊழியர்கள் மற்றும் முகாமைக்கான உறுதிப்பாடு**: காப்புறுதி சில சிக்கலான சூழ்நிலைகளில் நிதி நெருக்கடியிலிருந்து ஊழியர்களையும் முகாமையையும் பாதுகாக்கிறது.
- **வளர்ச்சியை வலுப்படுத்துதல்**: காப்புறுதியானது, பொருளாதார வளர்ச்சி, தொழிற்துறை வளர்ச்சி மற்றும் பொருளாதார விரிவாக்கம் அகியவற்றுக்கு ஆதரவளிப்பதன் மூலம் முதலீடு மற்றும் முயற்சியாளர்களை ஊக்குவிக்கிறது,
- **பரந்த சந்தை அணுகலுக்கு வசதியளித்தல்**: காப்புறுதி சில இழப்புகளுக்கு எதிராக காப்பீடுகளை வழங்குவதன் மூலம் சர்வதேச வர்த்தகம் மற்றும் ஏற்றுமதிகளுக்கு வசதியளிக்கிறது.
- **வேலைவாய்ப்பு வளர்ச்சி**: காப்புறுதி நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.
- **நிதிப் பங்களிப்பு**: காப்புறுதி நிறுவனங்கள் அரச பிணைப் பத்திரங்களின் மீதான முதலீடு போன்ற வேறுபட்ட முதலீடுகளில் ஈடுபட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதன் காரணமாக, காப்புறுதி தேசிய அபிவிருத்திக்கான நீண்டகால சேமிப்பைத் திரட்டுவதுடன், நிதி முறைமையின் நிலைபேறான தன்மைக்கு ஆதரவளிக்கிறது.
- **வணிகத்தின் வினைத்திறனை அதிகரித்தல்**: இழப்பின் நிச்சயமற்ற தன்மை வணிகர்களின் மனதை மோசமாக பாதிக்கலாம். காப்புறுதி நிச்சயமற்ற தன்மையை நீக்குவதன் மூலம் வணிகர்களை அவர்களின் கடின உழைப்பை நோக்கி ஊக்குவிக்கின்றது.
- **ஊழியர்களின் நலன்**: ஊழியர்களின் நலன் தொழில்தருனரது பொறுப்பாகும். ஊழியர்களுக்கு காப்புறுதி வசதியை வழங்குவது அவர்களின் நலன்புரி வசதிகளை மேம்படுத்தும். இதன் விளைவாக வேலைகளை நோக்கிய ஊக்குவிப்பு அதிகரிக்கும்.

*(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## *வினா 04 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 04 - வணிக அமைப்புக்களில் வியாபாரம்* |
|---|
| *அத்தியாயம் 03 – வணிகத்தின் துணைச் சேவைகள்* |

**(a)** **ஒரு பயனுறுதிமிக்க ஏற்பாட்டியல் முறைமை தொடர்பில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய காரணிகள் பின்வருமாறு:**

- போக்குவரத்து வசதிகளின் கிடைப்பனவுத் தன்மை
- போக்குவரத்துக் கிரயம்
- தூரம் மற்றும் அடைவிடம்
- நேர முகாமை
- களஞ்சியசாலை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகள்
- கையாளுதல் மற்றும் பொதியிடல்
- இருப்பு முகாமை
- உட்கட்டமைப்பு வசதிகள்
- ஆவணப்படுத்தல் மற்றும் இணக்கப்பாடு
- இடர் முகாமை மற்றும் காப்புறுதி
- தகவல் தொழில்நுட்பம்

*(03 புள்ளிகள்)*

**(b)** **விநியோக வழிமுறைகள் முறையாக முகாமை செய்யப்படாவிட்டால் தரிந்து சில பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:**

- வினைத்திறனின்மை காரணமாக **விநியோகக் கிரயங்களில் ஏற்படும் அதிகரிப்பு**, இலாபத்தன்மை மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.
- **சந்தைப் பங்கின் சேதம்**: விநியோகத்தில் ஏற்படும் தாமதம், வாடிக்கையாளர் அதிருப்தியை ஏற்படுத்துவதால் சந்தை பங்கு இழக்கப்படும் இடர்.
- களஞ்சியசாலை அல்லது விநியோக வசதிகளில் ஏற்படும் குறைந்த தரம் காரணமாக பொருட்கள், குறிப்பாக மசாலாப் **பொருட்களின் சேதம் அல்லது மோசமடைதல்**, வாடிக்கையாளர்களின் எதிர்க்கணியப் பின்னூட்டத்துக்கு வழிவகுக்கும்.
- **வெளிநாட்டுக் கொள்வனவாளர்கள் மற்றும் சந்தை நற்பெயர் இழப்பு** வணிகத்தின் வியாபாரப் பெயர் மீது எதிர்க்கணியத் தாக்கத்தை வெளிப்படுத்தும்.
- **இடைநிலையாளர்களுடனான மோசமான ஒருங்கிணைப்பு**, விநியோகச் சங்கிலியின் கிரயத்தை அதிகரித்து, இறுதியில் சந்தை வலையமைப்பு மற்றும் இலாபத்தன்மை ஆகியவற்றின் மீது எதிர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தும்.
- சேதங்கள் மற்றும் விநியோகத் தாமதங்கள் காரணமாக ஏற்படும் **அதிக இருப்பு வைத்தல் கிரயங்கள்** இலாபத்தன்மை இழப்பை ஏற்படுத்தும்.
- எதிர்மறையான வாடிக்கையாளர் அனுபவங்கள் காரணமாக **சர்வதேச சந்தைகளில் போட்டித்தன்மை குறைந்து**, நீண்டகால சந்தை நிலையைப் பாதிக்கும்.

- விரயம் மற்றும் வினைத்திறனின்மை மற்றும் ஏற்பாட்டியலின் அதிகரித்த கிரயம் காரணமாக ஏற்படும் **இலாபத்தன்மை வீழ்ச்சி**, வணிகத்தின் நிலைபேறான தன்மையை அச்சுறுத்தும்.
- **சட்டச் செலவுகளின் அதிகரிப்பு**: விநியோக வழிமுறைகளில் பங்குபற்றும் தரப்பினருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை முகாமை செய்ய, இழப்பீடு மற்றும் பிற சட்டச் செலவுகளை மேற்கொள்ளவும் வணிகம் அதிக செலவுகளைச் செய்ய வேண்டியிருக்கும்.

***(05 புள்ளிகள்)***

**(c)** ஒருபக்க வர்த்தக ஒப்பந்தம் என்பது ஒரு நாடு பரஸ்பர நன்மைகளை எதிர்பார்க்காமல் மற்றொரு நாட்டிற்கு வர்த்தக நன்மைகளை (கட்டணக் குறைப்பு அல்லது சந்தை அணுகல் போன்றவை) வழங்கும் ஒரு வர்த்தக ஏற்பாடாகும்.

**உதாரணம்**: ஒரு அபிவிருத்தி அடைந்த நாடு, அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டிலிருந்து இறக்குமதிகளுக்கு வரி இல்லாத அணுகலை அனுமதித்தல்.

அல்லது

ஒரு நாடு மற்ற நாடுகளைப் பொருட்படுத்தாமல் விதிக்கும் ஒரு வர்த்தக ஒப்பந்தம். அது அந்த ஒரு நாட்டிற்கு மட்டுமே பயனளிக்கும். இது ஒருதலைப்பட்சமானது, ஏனெனில் மற்றய நாடுகளுக்கு இவ் விடயத்தில் வேறு எந்த தெரிவும் இருப்பதில்லை. அத்தோடு பேச்சுவார்த்தைக்கும் உட்பட்டதாக இருக்காது.

***(02 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

*அத்தியாயம் 07 – பொருளாதாரத்தின் முதுகெலும்பான சிறிய நடுத்தரளவு வணிகங்கள்*

*அத்தியாயம் 05 – வணிகத்தின் மீதான அரசின் செல்வாக்கு, வணிகம் ஒன்றுக்கான வணிக நெறிமுறைகள் மற்றும் சமூகப் பொறுப்பின் முக்கியத்துவம்*

**(a) இலங்கையில் ஒரு சிறிய நடுத்தர வணிக நிறுவனமான Lanka crafts வணிகத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்கான வழிகள்:**

- முயறிசயாண்மைக் கலாச்சாரம் மற்றும் திறன் விருத்தி
- நிதிக்கான அணுகல்
- சந்தை வசதி
- பிராந்திய சமநிலை
- இறக்குமதிப் பொருட்களுடன் போட்டியிடத் தக்கவாற உற்பத்தித் தரம் மற்றும் வடிவமைப்பை மேம்படுத்துதல்
- உற்பத்தியில் நவீன தொழில்நுட்பம் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துதல்
- ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் திறன் விருத்தியை வழங்குதல்
- பயனுறுதிமிக்க கிரயக் கட்டுப்பாடு மற்றும் நிதி முகாமை
- வலுவான வணிகப்பெயர் மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களை உருவாக்குதல்
- நிகழ்நிலை மற்றும் ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துதல்
- சிறிய நடுத்தர வணிக நிறுவனங்களுக்கான அரச ஊக்குவிப்புக்கள் மற்றும் ஆதரவு திட்டங்களுக்கான அணுகல்
- உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துதல்
- வழங்குனர் உறவுமுறைகளை வலுப்படுத்துதல்
- புத்தாக்கம் மற்றும் படைப்பாற்றல் / ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவித்தல்
- சுற்றுச்சூழலை வணிகத்துக்கு வாய்ப்பாக்குதல்

*(03 புள்ளிகள்)*

**(b) அரசாங்கம் வணிகங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் வழிகள்:**

(1) ஒரு வாடிக்கையாளர் என்ற வகையில் வணிகத்தின் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு.

(2) ஒரு போட்டியாளர் என்ற வகையில் வணிகத்தின் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு.

(3) உட்கட்டமைப்பு மற்றும் அத்தியாவசிய சேவை வழங்குனராக வணிகத்தின் மீதான செல்வாக்கு.

(4) ஒரு ஒழுங்குமுறை அதிகார அமைப்பாக வணிகத்தின் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு.

(5) ஒரு ஊக்குவிப்பு வழங்குநராக வணிகத்தின் மீதான அரசாங்கத்தின் செல்வாக்கு.

(6) நிதி உதவி / வசதிகளை வழங்குவதன் மூலம், அரசாங்கம் வணிக வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்.

<u>பின்வருவனவற்றிற்கும் மதிப்பெண் வழங்கப்பட வேண்டும்</u>

- வரிக் கொள்கைகள் (வரிச் சலுகைகள், பெறுமதி சேர் வரி, வருமான வரி)
- வர்த்தகக் கொள்கைகள் (இறக்குமதித் தீர்வைகள், ஏற்றுமதி ஊக்குவிப்புக்கள்)
- ஊழியச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்
- சிறிய நடுத்தர வணிக நிறுவனங்களுக்கான பயிற்சி மற்றும் விருத்தித் திட்டங்கள்
- நிதி ஆதரவுத் திட்டங்கள் (கடன்கள், கொடைகள், மானியங்கள்)
- உரிமம் வழங்குதல் மற்றும் பதிவுத் தேவைகள்
- சுற்றுச்சூழல் விதிமுறைகள்
- உட்கட்டமைப்பு அபிவிருத்தி (வீதிகள், துறைமுகங்கள், பயன்பாட்டு அம்சங்கள்)
- நாணய மற்றும் பாதீட்டுக் கொள்கைகள்
- விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் நியமங்கள்

***(03 புள்ளிகள்)***

**(c)**

**1) சமூகத்தை நோக்கிய சமூகப் பொறுப்பு:**

சமூகத்திற்கான ஒரு வணிகத்தின் சமூகப் பொறுப்பு என்பது நெறிமுறையாகச் செயற்படுதல், இலாபத்திற்கு அப்பால் பொதுவான நல்வாழ்வுக்கு பங்களித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நெறிமுறை செயற்பாடுகள் போன்றவற்றில் கவனம் செலுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**2) நுகர்வோர் நோக்கிய சமூகப் பொறுப்பு:**

ஒரு வணிகர் நம்பகமானவராக, மோசடியற்றவராக, நியாயமானவராகக் காணப்படுதல் வேண்டும். வணிகர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப் பின்பற்ற வேண்டும்:

- பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றிய துல்லியமான தகவல்களை வழங்குதல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளை மாற்றாமல் வழங்குதல்.
- விலை மற்றும் பிற நடவடிக்கைகள் வாக்குறுதியளிக்கப்பட்டபடி செயற்படுத்தல்.
- வாடிக்கையாளர்களுக்கு தரமான உற்பத்திகளை வழங்குதல்.

**3) ஊழியர்களுக்களை நோக்கிய சமூகப் பொறுப்பு**

வணிகங்கள் ஊழியர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும். ஊழியர்களுக்கான சமூகப் பொறுப்பை நிறைவேற்றுவது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- தொழில்தருனர்-தொழிலாளர் உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- வணிக முயற்சிகளை நேர்க்கணியமான முறையில் கொண்டு நடாத்துதல்.
- ஊழியர்களின் தனிப்பட்ட இலக்குகளில் கவனம் செலுத்துதல்.
- வேலையின் சமத்துவத்தைப் பாதுகாத்தல்.

- தொழில் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான சூழலை உறுதி செய்வதற்கான பாதுகாப்புத் திட்டங்களைப் பின்பற்றுதல்.
- விபத்துகள் மற்றும் நோய்களுக்கு இழப்பீடு வழங்குதல்.
- இடர் பாதுகாப்புக்கான காப்புறுதிக் கொள்கைகளை செயற்படுத்துதல்.

**4) முதலீட்டாளர்களை நோக்கிய சமூகப் பொறுப்பு**

உரிமையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பிற நிதி வழங்குநர்களின் பணத்துக்கு நியாயமான வருமானத்தை ஈட்டுவதற்கு முகாமையாளர்கள் பொறுப்புடையவர்களாவர். வளங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதையும், வினைத்திறனான மற்றும் வெளிப்படையான முறையில் முகாமை செய்யப்படுவதையும் முகாமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

*பிரிவு **B** முடிவு*

## *வினா 06ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02: வணிகச் சூழல் மற்றும் வணிக அமைப்பில் அதன் விளைவுகள்***
***அத்தியாயம் 03: வணிகத்தின் துணை சேவைகள்***
***அத்தியாயம் 07: முயற்சியாண்மையின் பங்களிப்பு***

**(a) Jayalath Exports (Pvt) Ltd வணிகத்தின் SWOT பகுப்பாய்வு**

**பலங்கள்**

- 1998 முதல் மசாலாப் பொருள் துறையில் நீண்ட வணிக அனுபவம் (27 ஆண்டுகளுக்கு மேல்).
- ஐரோப்பா மற்றும் ஆசியாவிற்கு பெறுமதி கூட்டப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட மசாலாப் பொருட்களை சிறந்த நற்பெயருடன் ஏற்றுமதி செய்தல்.
- நிதி அணுகலை அனுமதிக்கத்தக்க, வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கூடிய தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனி அந்தஸ்து.
- சர்வதேச சந்தைகளின் ஆய்வு.
- நவீன பொதியிடல் மற்றும் சர்வதேச சான்றிதழ்களில் முதலீடு.
- சிறு விவசாயிகளுடன் வலுவான உறவுகள்.
- எண்ணியல் தளங்கள் மற்றும் மின்னணு வணிகப் பயன்பாடு.
- சட்ட ஆளுமை, நம்பகத்தன்மையை உருவாக்குதல்.
- நன்கு ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு செயலாக்க மையங்கள்.

**பலவீனங்கள்**

- மூலப்பொருட்களை தொடர்ச்சியாக பெறுவதில் சிரமங்கள்.
- உற்பத்தி, ஏற்பாட்டியல் மற்றும் கப்பற்படுத்தல் தொடர்புபட்ட உயர்வான கிரயங்கள்.
- வெளிப்புற போக்குவரத்து மற்றும் துறைமுக வினைத்திறனைச் சார்ந்திருத்தல் ∴ கப்பல் வழித்தடங்களை நம்பியிருத்தல், வரையறுக்கப்பட்ட ஏற்பாட்டியல் கட்டுப்பாடு

**வாய்ப்புகள்**

- அதிகரித்து வரும் இயற்கையான மற்றும் நிலைபேறான இலங்கை மசாலாப் பொருட்களுக்கான உலகளாவிய கேள்வி.
- மின்னணு வணிக தளங்களின் வளர்ச்சி.
- உலகமயமாக்கல் மற்றும் எண்ணியல் வர்த்தகம் புதிய வாய்ப்புகளைத் தோற்றுவித்தல்.

**அச்சுறுத்தல்கள்**

- இந்தியா, வியட்நாம் மற்றும் பிற மசாலாப் பொருட்கள் ஏற்றுமதியாளர்களிடமிருந்து வலுவான போட்டி.
- பொருளாதார நெருக்கடி காரணமாக அதிக பணவீக்கம்.
- தொற்றுநோய்கள் மற்றும் புவிசார் அரசியல் பிரச்சினைகள் போன்ற உலகளாவிய இடையூறுகள்.

- காலநிலை மாற்றம் மற்றும் ஒழுங்கற்ற காலநிலை போக்குகள்.
- இலங்கையில் அரசியல் உறுதியற்ற தன்மையுடன் அடிக்கடி ஏற்படும் கொள்கை மாற்றங்கள்
- நாணயமாற்று வீதத் தளம்பல்கள் / அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை
- வழங்கல் சங்கிலி சீர்குலைவு

***(06 புள்ளிகள்)***

**(b) Jayalath Exports (Pvt) Ltd வணிகத்தின் மீது பூகோள வணிகச் சூழல் தாக்கம் செலுத்தும் முறை**

- **பூகோளப் பொருளாதார நிலைமைகள்:** பணவீக்கம், மந்தநிலை அல்லது பூகோள சந்தைகளின் வளர்ச்சி போன்றவை மசாலா ஏற்றுமதிகளின் கேள்வி, விலைகள் மற்றும் இலாபத்தன்மை மீது தாக்கம் செலுத்துகின்றன.
- **சர்வதேச வர்த்தக இடையூறுகள்**: உலகளாவிய தொற்றுநோய் நிலைமைகள் அல்லது பூகோள அரசியல் மோதல்கள் போன்ற நிகழ்வுகள் கப்பல் போக்குவரத்து தாமதங்கள் மற்றும் அதிக ஏற்பாட்டியல் கிரயங்களை ஏற்படுத்தும்.
- **அந்நிய செலாவணி விகிதத் தளம்பல்கள்**: மாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஏற்றுமதி வருவாயையும் இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளின் செலவையும் பாதிக்கின்றன.
- **உலகளாவிய போட்டி**: இந்தியா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளின் வலுவான போட்டியானது, விலை நிர்ணயம் மற்றும் சந்தைப் பங்கைப் பாதிக்கும்.
- **சர்வதேச நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள்** - தரச் சான்றிதழ்கள் மற்றும் உணவுப் பாதுகாப்பு நியமங்களுக்கான தேவைப்பாடுகள் இணக்கப்பாட்டுக் கிரயங்களை அதிகரிக்கும்.
- **உலகளாவிய கேள்விப் போக்குகள்**: இயற்கையான மற்றும் நிலைபேறான பொருட்களுக்கான கேள்வி அதிகரித்து வருவது, புதிய வாய்ப்புகளை உருவாக்கும்.
- **உலகளாவிய எண்ணியல்மயமாக்கல் மற்றும் மின்னணு வணிகம்**: Jayalath Exports (Pvt) Ltd வணிகம் வாடிக்கையாளர்களை நேரடியாகச் சென்றடைவதுடன், இடைநிலையாளர்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்கலாம், ஆனால் தகவல் தொழில்நுட்பம், இணையழிப் பாதுகாப்பு மற்றும் எண்ணியல் திறன்களில் முதலீடு செய்ய வேண்டும்.
- **நிலைபேறானதன்மை மற்றும் நுளுபு கேள்விகள்**: இயற்கையான மற்றும் சுற்றுச்சூழல் சிநேக உற்பத்திகளுக்கான வளர்ந்து வரும் சந்தை. Jayalath Exports (Pvt) Ltd வணிகம் சான்றுப்படுத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சிநேக நடைமுறைகளைப் பேணுவதுடன், அது கிரயங்களை அதிகரிக்கும், ஆனால் உயர்தரமான வாய்ப்புகளை உருவாக்கும்.
- **புவிசார் அரசியல் மற்றும் வர்த்தகக் கொள்கை மாற்றங்கள்**: தீர்வைத் தடைகள், நிபந்தனைகள் அல்லது இறக்குமதித் தடைகள் (உ-ம்: பொருளாதார நெருக்கடியின் போது இலங்கையின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள்) ஏற்றுமதியை சீர்குலைக்கக்கூடும் ஆகையால், சந்தைகளின் பன்முகப்படுத்தல் அவசியமாகின்றது.
- **காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை சுற்றுச்சூழல் சவால்கள்**: பயிர் விளைச்சல் தளம்பல்கள், வழங்கல் மூலத்தின் பன்முகப்படுத்தல், விவசாயிகளின் பயிற்சியயித்தலில் முதலீடு செய்தல் மற்றும் காலநிலை-எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர்களை கண்டறிதல்.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

**(c) Jayalath Exports (Pvt) Ltd வணிகத்துக்கு அவசியமான போக்குவரத்து அமைப்பின் கூறுகள்.**

- வழி
- ஊடகம்
- வலு
- முனையம்

*(03 புள்ளிகள்)*

**(d) பயனுறுதிமிக்க போக்குவரத்து முறையினால் Jayalath Exports (Pvt) Ltd வணிகத்துக்கு ஏற்படும் நன்மைகள்.**

- சர்வதேச கொள்வனவாளர்களுக்கான பொருட்களின் உரிய நேர விநியோகத்தை உறுதி செய்தல்.
- போக்குவரத்து மற்றும் கையாளல் கிரயங்களைக் குறைத்தல்.
- ஏற்றுமதி செய்யப்பட்ட மசாலாப் பொருட்களின் தரத்தைப் பேணுதல்.
- வாடிக்கையாளர் திருப்தி மற்றும் நற்பெயரை மேம்படுத்துதல்.
- ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துதல்.
- தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை சரியான நேரத்தில் கொள்வனவு செய்தல்.
- வாடிக்கையாளருக்கு தொடர்ச்சியாகப் பொருட்களை விநியோகித்தல்.
- சரியான நேரத்தில் சரியான சந்தையை அடைதல்.
- போக்குவரத்து வாடிக்கையாளர்களை எந்தவொரு இடத்திலிருந்தும் பொருட்களை கொள்வனவு செய்ய அனுமதிக்கும்.

*(03 புள்ளிகள்)*

**(e) முயற்சியாண்மையின் சமூக மற்றும் பொருளாதார நன்மைகள்**

- வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
- தேசிய வருமானம் மற்றும் ஏற்றுமதி வருவாயை அதிகரித்தல்.
- புத்தாக்கம் மற்றும் பெறுமதி அதிகரிப்பை ஊக்குவித்தல்.
- பிராந்திய மற்றும் கிராமப்புற வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- உற்பத்தியின் தரத்தை மேம்படுத்துதல்.
- வறுமையைக் குறைத்தல்.
- நியாயமான போட்டியை உருவாக்குதல்.
- நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்தல்.
- புதிய வருவாய் மற்றும் சேவைகளுக்கான நுகர்வுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- உற்பத்திக்கு உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துதல்.
- புதிய சந்தைகளின் வளர்ச்சி.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

***பிரிவு C முடிவு***

aat SRI LANKA

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be consrhpahdJd as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*